**குழந்தைகளுக்கும் இளையோருக்குமான ஊடக நிறுவனம் சுவிஸ் (SIKJM)**

குழந்தைகளுக்கும் இளையோருக்குமான ஊடக நிறுவனம் சுவிஸ் ஆனது „எனக்கு ஒரு கதையைப் பரிசளி – Family Literacy" என்ற திட்டத்தை 2006 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இத் திட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டு சுவிஸ் யுனெஸ்கோ ஆணைக்குழுவின் எழுத்தறிவின்மைக்கு எதிரான செயற்பாட்டிற்கான அல்பா பரிசு வழங்கப்பட்டது. ஆவணி 2010 ஆம் ஆண்டு பல்கலாச்சார உரையாடல்களை ஊக்குவித்தமைக்கான யுனிசெப் ஒரேஞ் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு SIKJM நிறுவனமானது „எனக்கு ஒரு கதையைப் பரிசளி – Family Literacy" எனும் திட்டத்தை சுவிஸ் நாடுமுழுவதும் கொண்டுவர முயற்சிகளை எடுக்கின்றது. வாசிப்புத்திறனை ஊக்குவித்தல், குழந்தைக மற்றும் இளையோருக்கான இலக்கியங்க ஆய்வுசெய்தல், இதுசம்பந்தமான ஆவணங்களை ஆவணப்படுத்தல் போன்றன SIKJM இன் முக்கிய வேலைகளாகும். அத்துட தன் கிளைகளை றோமாண்டீ, தெசின் போன் மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது.

**www.sikjm.ch/literale-foerderung/projekte/schenk-mir-eine-geschichte**

**பல்கலாச்சார நூலகங்கள்**

சுவிஸில் உள்ள இந்த நூலகங்கள் அனைத்திலும் எண்ணற்ற பலமொழிப் புத்தகங்கள் உள்ளன. இவை அனைத்தும் Verein Interbiblio என்ற அமைப்பின் கீழ் இயங்குகின்றன. **www.interbiblio.ch**

**Bibliomedia Schweiz**

நகரநூலகம், கிராமநூலகம், பாடசாலைகள் மற்றும் அதன் நூலகங்களும் 11 வேறுபட்ட மொழியிலான புத்தகங்களை இரவல் எடுக்கலாம். **www.bibliomedia.ch**





Schweizerisches Institut für Kinder- und Jugendmedien

Georgengasse 6, 8006 Zürich
Tel. 043 268 39 00
info@sikjm.ch
www.sikjm.ch

Illustrationen: © Claudia de Weck

தமிழ் / Tamil

# எனக்கு ஒரு கதையை பரிசளி!

## Family Literacy



குழந்தைகளின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் திட்டம்



பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் குழந்தைகளின் மொழிவளர்ச்சியையும், வாசிப்புத்திறனையும் ஊக்குவிக்கமுடியும்

Schweizerisches Institut für Kinder- und Jugendmedien

**தாய்மொழியில் கதைத்தல்**
நீங்கள் உங்கள் குழந்தையுடன் உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த மொழியில் கதைப்பதால், அப்பிள்ளை வேற்று மொழிகளைப் பழகுவதற்கு அதுவே ஒரு திடமான அத்திவாரமாக அமைகின்றது.


**சொல்வதைக் கேட்பதும் அதற்குப் பதிலளிப்பதும்**
உங்களுடைய பிள்ளை உங்களுடன் நிறையக் கதைப்பதன் மூலம் அதனுடைய பேச்சாற்றல் அதிகரிக்கிறது.நீங்கள் உங்கள் குழந்தை அவதானிக்கின்ற விடயங்கள் பற்றி குழந்தையுடன் உரையாடுவதால் குழந்தையின் சொல்வளம் விருத்தியாவதுடன், புதியசொற்களைத் தெரிந்துகொள்ளும் ஆர்வமும் அதிகரிக்கும்.




**மகிழ்ச்சியாகச் சேர்ந்து உரையாடுதல்**
சிறுவர்களுக்கான கவிதைவரிகள், பாடல்கள் மற்றும் ஆடலும் பாடலும் போன்றன ஒரு குழந்தை ஆசையுடன் மொழியைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

**பல மொழிகளைப் பேச உதவுதல்**
உங்களுடைய பிள்ளை இரண்டு அல்லது மூன்று மொழிகளை ஒரே நேரத்தில் கற்கமுடியும். எப்போது யாருடன் எந்த மொழியில் கதைக்கவேண்டும் என்ற விதிமுறைகளை குழந்தைக்குச் சொல்லிக்கொடுப்பதன் மூலம் அவர்கள் பலமொழிகளைக் கற்பதற்கு உதவலாம்.

**தொடர்புகளை உண்டாக்குதல்**
உங்கள் குழந்தை மற்றைய குழந்தைகளுடனும், பெரியவர்களுடனும் தொடர்புகளை வைத்திருப்பதன் மூலம் ஜேர்மன்மொழியை விரைவில் கற்றுக்கொள்ளும். உங்கள் குழந்தைக்கு இத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு நீங்கள் உதவுங்கள்.



**கதைகள் கூறுவதும், படங்கள் பார்ப்பதும்**
கதைகளும், படங்களும் உங்களுடைய பிள்ளையை புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும். குழந்தை உங்களுடன் சேர்ந்து புதியவிடயங்களைத் தெரிந்து கொள்வதோடு பல புதிய வார்த்தைகளையும் தெரிந்து கொள்ளும்.



**சேர்ந்து எழுத்தைக் கண்டுபிடித்தல்**
எழுத்துக்களும், குறியீடுகளும் உங்களுடைய குழந்தையை நன்கு கவரும். உங்களின் உதவியுடன் குழந்தை எழுத்துக்களையும், அதன் வடிவங்களையும் தெரிந்துகொள்ளும். குழந்தை தாள்களையும், எழுதுகோல்களையும் எடுத்துப் பரீட்சித்துப் பார்க்க முயற்சிக்கும்.



**நூலகங்களின் பாவனை**
நீங்கள் உங்களுடைய பிள்ளையுடன் நூலகங்களுக்குச் சென்று அங்கு புத்தகங்களைத் தெரிவுசெய்து இரவலாக வீட்டிற்கு எடுத்து வரலாம்.

**வாசிப்பதை ஊக்குவிப்பதில் குடும்பமும் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.**
கதைகள், மற்றும் எழுத்தறிவு மூலம் பெற்ற அனுபவமும், அதேபோன்று முதல்மொழித் தேர்ச்சியுமே ஒரு குழந்தை ஜேர்மன்மொழியையும், வாசித்தலையும் பாடசாலையில் கற்றுக்கொள்வதற்கு அத்திவாரமாக அமைகின்றன. எனக்கு ஒரு கதையைப் பரிசளி – Family Literacy“ என்ற திட்டத்தின்கீழ் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் மொழி மற்றும் வாசிப்புத் திறனை ஊக்குவிப்பதற்கு உதவி செய்கிறது.

**2 - 5 வயது வரையிலான பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்குமான வகுப்புகள் (Animationen)**
பெற்றோர்களும், பிள்ளைகளும் சேர்ந்து ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் ஒன்றுகூடி, SIKJM ஆல் பயிற்றுவிக்கப்பட்ட கதைசொல்பவரின் (Animator) வழிகாட்டலில், கதைகளைக் கூறுதல், குழந்தைகளுக்கான கவிதைவரிகளியும், பாட்டுக்களையும் ஆடலுடன் செய்துகாட்டுதல், விளக்கப்படங்களுள்ள புத்தகங்களைப் பார்த்தல் போன்ற இன்னும் பல விடயங்களை செய்வார்கள். இந்த வகுப்புகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இவை நூலகங்கள், ஒன்றுகூடல் நிலையங்கள் (Quartierzentren) போன்ற இடங்களில் நடைபெறும்.

**வெவ்வேறு மொழிகள்**
வாசிப்பதை ஊக்கப்படுத்தும் வகுப்புக்கள் வெவேறு மாநிலங்களில், பல மொழிகளில் நடைபெறுகின்றன. அத்துடன் தேவைக்கு ஏற்ப வேறு மொழிகளும் இணைத்துக்கொள்ளப்படும். இவை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு, கீழுள்ள இணையத்தள முகவரியைப் பார்வையிடவும். SIKJM-Website www.sikjm.ch.